**பூஜாபிடிய பிரதேச சபை - 2023**

--------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பூஜாபிடிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கூற்று முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்கள் அடங்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பூஜாபிடிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 முதல் மீளாய்வாண்டு வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த 06 செயற்திட்டங்களின் பெறுமதியாகிய ரூபா 1,149,486 தொகை மற்றும் 2021 மற்றும் முன்னைய ஆண்டின் போது உடன்படிக்கை மேற்கொண்டிருக்காத ரூபா 1,050,000 இற்கான 09 செயற்திட்டங்கள் கடன்கொடுத்தோர் எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் கடன்கொடுத்தோர் ரூபா 2,199,486 | அடுத்த வருடம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது தீர்க்கப்பட்டிருந்த ரூபா 802,608 இற்கான 04 கடன்பட்டோர் மீதிகள் தொடர்ந்தும் கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் 04 அலகுகள் மற்றும் மோட்டார் வாகனம் ஒன்றின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக் கொண்டு கணக்கீடு செய்யப்படும் என. | சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்களின் விபரம் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முறையான அங்கீகாரமொன்றின்றி மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நாட்குறிப்பு பதிவு இலக்கம் 59 மற்றும் 60 கீழ் ரூபா 4,044,650 இற்கான 39 கடன்பட்டோர் மீதிகள் நாட்குறிப்பு பதிவு 66 மற்றும் 67 இன் கீழ் ரூபா 5,957,616 இற்கான 109 கடன்கொடுத்தோர் மீதிகள் திரண்ட நிதியத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது. | கலந்துரையாடி தீர்மானம் ஒன்று எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முறையான அங்கீகாரம் பெற்றுக் கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 9,123,236 இற்கான 03 சொத்து விடயங்கள் தொடர்பான அட்டவணைகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கு மீதிகள் தொடர்பான பதிவேடுகள், கோப்புக்கள் மற்றும் அட்டவணைகள் பேணிச் செல்ல வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் பிரிவு 12(1)(ஏ) | வெளியிடப்படுகின்ற கட்டளைகளின் படி அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் நிர்மாணிக்கப்பட்டிருந்த 06 கட்டிடங்கள் தொடர்பாக சபையினால் நடவடிக்கை ஏதும் கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதி 218 | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணிப்பீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என. | விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | நிதிப் பிரமாணம் 571(3) | ரூபா 1,904,323 தொகைக்கான காலவதியான 07 பலவின வைப்பு மீதிகள் மற்றும் 07 தடுத்து வைத்தல் வைப்புக்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நி.பி. இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 28,861,015 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 11,558,476 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 4,309,000 | 4,436,291 | 5,432,139 | 2,658,450 | 4,306,980 | 4,361,957 | 2,801,917 | 3,654,298 |
| ii. | வாடகை | 6,540,000 | 6,416,060 | 6,056,038 | 651,394 | 5,129,648 | 4,381,873 | 4,083,675 | 291,372 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,575,150 | 2,425,460 | 2,425,460 | - | 2,702,050 | 2,485,635 | 2,485,635 | - |
| iv. | ஏனைய வரு மானங்கள் | 33,249,400 | 39,679,175 | 19,048,816 | 58,447,126 | 25,643,240 | 20,607,650 | 9,194,648 | 37,816,767 |
| | மொத்தம் | 46,673,550 | 52,956,986 | 32,962,453 | 61,756,970 | 37,781,918 | 31,837,115 | 18,565,875 | 41,762,437 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி வரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 2,637,257 தொகையாக காணப்பட்டதுடன், ஒரு அலகின் வீதவரி நிலுவை ரூபா 5,000 இனை மிகைத்த 54 வீதவரி அலகுகளின் கூட்டுத்தொகை ரூபா 479,366 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| **(ஆ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 816,851 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 56,386,881 தொகை காணப்பட்டது. | அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணத்தை தருவித்துக் கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குப்பை முகாமைத்துவதற்திற்காக திட்டமிடப்பட்டுள்ள எனசல்மட காணி நிலஅளவை மற்றும் உரித்தாக்கல் கட்டணமென ரூபா 400,000 தொகை காணி மறுசீரமைப்பு அதிகார சபைக்கு 2013 ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியளவிலும் காணியை உரித்தாக்கி குப்பை முகாமைத்துவ அலுவல்களை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செலவிடப்பட்ட தொகை மீண்டும் பெற்றுக் கொள்ளப்படும் என. | குப்பை முகாமைத்துவம் செயற்படுத்த வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 ஆண்டு முதல் காணப்படுகின்ற பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்திற்கு ரூபா 3,221,904 இற்கான மீதியொன்றினை செலுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஓய்வூதிய திணைக்களத்தை வினவப்பட்டது என. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அம்பதென்ன கிங்ஸ்கோட் எனும் காணி 1994 முதல் 2004 ஆண்டினுள் III கட்டங்களின் கீழ் தனியார் கம்பனி ஒன்றினால் துணைப் பகிர்வு மேற்கொண்டு ஏலவிற்பனையில் விற்பனை செய்திருந்த அம்பதென்ன கிங்ஸ்கோட் எனும் காணியில் சனசமூக மற்றும் களியாட்ட அலுவல்களுக்காக 156 பர்சஸ் காணியை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு உரித்தாக்கப்பட்டிருந்த 23 பர்சஸ் காணிப் பகுதியும் எதுவித பொது அலுவல்களுக்கும் பயன்படுத்தப்படாமல் பாதுகாப்பு வேலி இடப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | காணிப் பகுதிகள் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என மற்றும் உரித்தாக்கப்பட்ட காணியை ஆக்கபூர்வமான கருமங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரித்தாக்கப்படாத காணிகளை உரித்தாக்குவதற்கு வேண்டியதுடன் அந்த காணிகளை குறிக்கோள் சார் கருமங்களுக்கு ஈடுபடுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2016 பெப்ரவரி 23 திகதிய இலக்கம் 1955/7 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டிருந்த பிரதேச சபையின் எல்லையினுள் கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கான வரைபுகளை பரிசோதனை செய்தல் மற்றும் கட்டணம் அறவீடு செய்தல் தொடர்பான துணை சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் அம்பதென்ன பகுதியில் அமைந்துள்ள பெனரோமா பார்க் எனும் காணி மற்றும் ஹெலன்கே வத்த எனும் காணியில் இருந்து சனசமூக மற்றும் களியாட்ட அலுவல்களுக்காக 123 பர்சஸ் காணி சபைக்கு உரித்தாக்கி இருக்காததுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 154(1) இற்கு இணங்க அந்த காணிகளிலிருந்து 1 சதவீத வரி அறவீடு செய்திருக்கவில்லை. | பெட் போத்தல் கொள்கலன் ஒன்று நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட காணி குறிக்கோள் சார் கருமங்களுக்காக ஈடுபடுத்த வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை 13,919,744 இற்கான 03 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணமொன்று மற்றும் பெறுமதி இணங்கான முடியாத வாகனமொன்று 3 வருடங்களுக்கும் 7 இற்கும் இடைப்பட்ட காலவீச்சில் விளைவற்று மற்றும் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. | திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு மற்றும் வேறு சபை ஒன்றிற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கும் மற்றும் பயன்படுத்த முடியாத சொத்துக்களை அப்புறப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 31 காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் ரூபா 7,967,144 இற்கான இரும்புருளை ஒன்றின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்கள் உரித்தாக்கப்பட வேண்டும். |

**3.5 செயற்திட்டங்கள், செய்பணிகள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டுகளின் போது மீண்டுவரும் வருமானம் பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படாமல் ரூபா 37,450,000 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்காக முதலீடு செய்யப்பட்டுள்ளது. | பிரதேச அபிவிருத்தி அலுவல்களுக்காக ஈடுபடுத்த வேண்டும். |

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியை இணக்கஞ் செய்த போது 11 பதவிகளில் 20 வெற்றிடங்களும் 01 பதவியில் 11 மிகைகளும் காணப்பட்டது. | அரச கொள்கைகளை செயற்படுத்துவதின் காரணமாக வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் மிகைப் பதவிகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகும் என. | பதவியணியை அங்கீகரித்துக் கொள்ள வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் விதிகளின் படி சபையினால் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகள் இனங்கண்டிருந்த போதிலும் அவற்றை நெருங்கியிருக்கவில்லை. | இலக்குகளை நோக்கி நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |